ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை – திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஊராட்சி ஒன்றியம், சோத்துப்பெரும்பேடு ஊராட்சி – திரு. எம்.வாசுதேவன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கத்தை எதிர்த்து சீராய்வு மனு செய்தது .

**ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (ஊ4) துறை**

**அரசாணை (ப) எண். 349** **நாள் 10.06.09.**

பார்வை:

1. தமிழ்நாடு அரசு, அரசிதழ் எண் VI (2)/763/2008, எண்.40, நாள் 15.10.2008 வெளியீடு.
2. மாவட்ட ஆட்சித் தலைவர் திருவள்ளூர் அவர்களின் செயலாணை ந.க.எண். 6427/07/அ3/ உஇ(ஊ), நாள் 21.10.2008.
3. திரு. எம்.வாசுதேவன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், சோத்துப்பெரும்பேடு, திருவள்ளூர் மாவட்டம், சீராய்வு மனு, நாள் .22.12.2008.

––––––

**ஆணை:**

திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் சோழவரம் ஊராட்சி ஒன்றியம், சோத்துப்பெரும்பேடு ஊராட்சி மன்றத் தலைவர் திரு.எம்.வாசுதேவன் ஊராட்சி பொது நிதியிலிருந்து நிதி முறைகேடு செய்து, விதிகளை மீறி செயல்பட்டது தொடர்பாக அவர் மீது தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 (த.நா சட்டம் 21/1994 ) பிரிவு 205 (l)–ன் கீழ் நடவடிக்கை எடுத்து அதன் விளைவாக 15.10.2008 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவரை பதவியிலிருந்து நீக்கம் செய்து மேலே 1–ல் படிக்கப்பட்ட தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிட்டார். அதன் பின்னர் மேலே 2–ல் படிக்கப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ஆணையில் அரசிதழில் அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து பதவி நீக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் சோழவரம் ஊராட்சி ஒன்றியம், சோத்துப்பெரும்பேடு ஊராட்சி மன்றத் தலைவர் திரு.எம்.வாசுதேவன் மீது கீழ்க்கண்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன:

1) ஊராட்சியில் குடிநீர் குழாய்கள் வெடிப்புகள் சரி செய்தல் மற்றும் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி பராமரிப்பு. 1.7.2007 முதல் 31.7.2007 வரை செலவு சீட்டுகள் மூலம் மொத்தம் ரூ. 12,800/– செலவிடப்பட்டதில் செலவு சீட்டு எண். 14 மற்றும் 16 ஆகியவற்றின் மூலம் செலவிடப்பட்டத் தொகை ரூ. 9,200/–க்கு துணைப்பட்டியல்கள் இணைக்கப்படவில்லை என குறிப்பிட்டமைக்கு நாளது வரை விளக்கம் பெறப்படவில்லை.

2) செலவு சீட்டு எண். 28/நாள் 4.10.2007ன்படி தெருவிளக்கு மின் உபகரணங்கள் ரூ. 20,050/–க்கு பெறப்பட்டதில் துணைப்பட்டியல்களின்றி ஆவணங்களும் சரிவர பராமரிக்கப்படாமல் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. துணைத் தலைவரும் இதில் கையொப்பமிட்டுள்ளதால், சந்தேகத்திற்கிடமான இச்செலவினத் தொகையை சரி பாதி இருவரும் ஊராட்சி நிதியில் செலுத்தக்கோரியும், நாளது தேதி வரை செலுத்தப்படவில்லை. விளக்கம் பெறப்படவில்லை.

3) 2007–2008ம் நிதியாண்டில் வீட்டு வரி (நிலுவை மற்றும் நடப்பு) கேட்பு பதிவேடு படிவம் 3ல் நிர்ணயம் செய்து வசூலிக்கப்படாதது குறித்து விளக்கம் கோரியும் நாளது தேதி வரை பெறப்படவில்லை.

4) வரியினங்கள் பல்வேறு ரசீது எண். 27,400 மற்றும் 27412 வரை ரூ.2,466/– மற்றும் ரசீது எண். 35501 முதல் 35503 வரை ரூ.390/– ஆக மொத்தம் ரூ.2,856/–ல் 31.7.2007 அன்று

ரூ.1000/– மட்டும் ஊராட்சியில் செலுத்தியது போக நிலுவைத் தொகை ரூ.1,856/– செலுத்தாமைக்கு நாளது தேதி வரை விளக்கம் பெறப்படவில்லை. தொகையும் செலுத்தப்படவில்லை.

5) கணக்கு எண். 3ல் செலவு சீட்டு எண். 1,2 மற்றும் 3ல் மேற்கொள்ளப்பட்ட செலவினத்திற்கும் கணக்கு எண். 2ல் செலவு சீட்டு எண். 1 மற்றும் 2ல் மேற்கொள்ளப்பட்ட செலவினத்திற்கும் முறையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. அதற்கான விளக்கமும் பெறப்படவில்லை.

6) 2006–2007ம் ஆண்டிற்குண்டான மின்விளக்கு பராமரிப்பு செலவுத்தொகை ரூ.77,800/–க்கு நாளது தேதி வரை முழுமையான செலவின விவரங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

3. திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் பதவி நீக்க அரசிதழ் அறிவிக்கை மற்றும் செயல்முறை ஆணையினை எதிர்த்து சோத்துபெரும்பேடு ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் திரு.எம்.வாசுதேவன் அரசுக்கு 22.12.2008 அன்று சீராய்வு மனு செய்துள்ளார்.

4. சீராய்வு மனுதாரரின் தரப்பு வாதத்தை நேரில் எடுத்துரைக்க ஏதுவாக 2.3.2009 அன்று நாள் குறிக்கப்பட்டு, மனுதாரர் தனது தரப்பு வாதத்தை வாய்மொழியாகவும் எழுத்து மூலமாகவும் கொடுத்தார்.

5. திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆவணங்கள் மற்றும் சீராய்வு மனுதாரரின் கூடுதல் விளக்கங்களை அரசு கவனமாகவும், தன்னிச்சையாகவும் விளக்கமாக ஆய்வு செய்தது. மனுதாரரின் வாதம் மற்றும் அரசின் கருத்து பின்வருமாறு:

**<u>மனுதாரரின் வாதம்.</u>**

வரவு செலவு கணக்குகள், ரசீதுகள் அனைத்தும் சரியாக தணிக்கை அலுவலராக செயல்பட்ட திரு.மா.சா.கோவர்தனன் சோழவரம் (துணை வட்டார வளர்ச்சி அலுவலர்) முன் தணிக்கைக்குரிய காலமான 2006–2007–ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டது. 22.8.2007 அன்று தணிக்கை செய்யப்பட்டு அறிக்கையில் வரவு செலவு கணக்கு வழக்குகள் ஆவணங்கள் ரசீதுகள் சரியாக உள்ளது என்று ஒப்புதல் அளிக்கப்பட்து. எனவே, மீண்டும் ஊராட்சி முதுநிலை மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் அவர்கள் எந்த முகாந்தரமும் அன்றி 03.05.2008 அன்று விளக்கம் கோரவோ ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் கொடுத்த பொய்யான ஆதாரமற்ற புகார் மீது புகாரின் நகலை பஞ்சாயத்து தலைவராகிய எனக்கு கொடுக்காமல் புகாரின் பேரில் விளக்கம் கோராமல் தன்னிச்சையாக பதவி நீக்கம் செய்ய இதையும் ஒரு காரணமாக காட்டியது தவறு.

**<u>மாவட்ட ஆட்சியரின் அறிக்கை</u>**

சோழவரம் ஊராட்சி ஒன்றியம் சோத்துப்பெரும்பேடு ஊராட்சியில் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் ஊராட்சி மன்றத் தலைவர் மீது 10.10.2007 மற்றும் 18.10.2007 அன்று அளித்த புகார்களின் மீது வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) சோழவரம் அவர்களை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க கோரப்பட்டதில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களால் விசாரணை செய்து பெறப்பட்ட அறிக்கையில் ஊராட்சி மன்ற தலைவர் ஊராட்சியின் ஆவணங்களை சரிவர பராமரிக்கப்படாததும் 2007–2008–ம் ஆண்டில் குடிநீர், மின்சாரம் போன்ற அத்தியாவசியமான பணிகளுக்கு செலவிடப்பட்ட செலவினங்களுக்கு அரசு விதிமுறைகளை பின்பற்றாமல் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததும் கண்டறியப்பட்டது. சோத்துப்பெரும்பேடு ஊராட்சியில் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடு காரணமாக ஊராட்சி நிர்வாகம் பாதிப்படையக் கூடாது என்ற நோக்கத்தின் அடிப்படையில் ஊராட்சி நிர்வாகம் செம்மையாக செயல்படவும் பணிகள் தொய்வின்றி மேற்கொள்ள ஏதுவாகவும் 15.10.2007, 10.11.2007, 22.11.2007 ஆகிய தினங்களில் ஊராட்சி

கூட்டம் நடத்த ஏற்பாடு செய்தும் துணைத் தலைவரும் பிற வார்டு உறுப்பினர்களும் கூட்டத்தினை புறக்கணித்தனர். இதைத் தொடர்ந்து அரசாணை எண். 238 ஊரக வளர்ச்சி (இ5) துறை நாள் 25.7.1997–ன் படி ஊராட்சிகளை ஆய்வு செய்யும் அலுவலர்களுள் ஒருவரான உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்கள் மேற்படி ஊராட்சியில் 19.12.2007 அன்று இப்பொருள் தொடர்பாகவும் ஊராட்சி மன்றத் தலைவரால் பராமரிக்கப்படும் கணக்குகளை 2007–2008–ம் ஆண்டிற்கு ஆய்வும் செய்யப்பட்டதில் மேற்படி ஆண்டில் குடி நீர், மின்சாரம், வீட்டுவரி மற்றும் பல்வகை வரியினங்கள் மற்றும் 2006–07–ம் ஆண்டில் மின் விளக்கு பராமரிப்பிற்காக எந்தவித விதிமுறைகளையும் பின்பற்றாமல் தொகை ரூ.77,800/–க்கு செலவினம் மேற்கொண்டது தொடர்பாகவும் ஊராட்சி மன்றத் தலைவரை விளக்கம் கோரப்பட்டது. ஊராட்சி மன்றத் தலைவர் மேல் முறையீட்டில் குறிப்பிட்டுள்ளது போல 2006–2007–ம் ஆண்டில் கணக்குகளை ஆய்வு செய்யவில்லை. மேலும் இந்த ஆய்வறிக்கைக்குக் கூட ஊராட்சி மன்றத் தலைவரால் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 நோட்டீஸ் அனுப்பப்படும்வரை பதில் பெறப்படவில்லை. மேலும் ஊராட்சி மன்றத் தலைவருக்கு நோட்டீஸ் அனுப்பப்படும் முன்னரே தன்னுடைய விளக்கத்தினை அளிக்க போதிய அவகாசம் அளிக்கப்பட்டிருந்தும் அவர் அதனை பயன்படுத்திக் கொள்ளவில்லை.

மேலும் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருவள்ளூர் அவரது கடிதம் ந.க.எண். 6427/07/அ3, நாள் 13.12.2007ன்படி துணைத் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் 10.10.2007, 18.10.2007 அன்று தலைவர் மேல் அளித்த புகார் மனுவினை ஊராட்சி மன்றத் தலைவருக்கு அனுப்பி வைத்து விளக்கம் கோரப்பட்டது. மேலும் துணைத் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களால் 3.1.2008 அன்று அளித்த புகார் மனுவினையும் ஊராட்சி மன்றத் தலைவருக்கு இதே கோப்பின் கடிதம் நாள் 28.1.2008–ன் படி அனுப்பி விளக்கம் கோரப்பட்டதில் அதற்கும் பதில் பெறப்படவில்லை. எனவே, ஊராட்சிமன்றத் தலைவர் மேல்முறையீட்டில் குறிப்பிட்டுள்ளது போல உறுப்பினர்களின் புகார் மனுவினை பஞ்சாயத்து தலைவராகிய தனக்கு கொடுக்காமல் புகாரின்பேரில் விளக்கம் கோராமல் தன்னிச்சையாக பதவி நீக்கம் செய்ய இதையும் ஒரு காரணமாக காட்டியது தவறு என்ற கூற்று ஆதாரமற்றது. எனவே இந்த மேல்முறையீடு பத்தியினை தள்ளுபடி செய்யலாம்.

<u>அரசின் கருத்து:</u>

சீராய்வு மனுதாரர் தன் மீது ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் கொடுத்த ஆதாரமற்ற புகார் மனு மீது, புகாரின் நகலை பஞ்சாயத்து தலைவராகிய தனக்கு கொடுக்காமல் புகாரின் பெயரில் விளக்கம் கோராமல் தன்னிச்சையாக பதவி நீக்கம் செய்ய இதையும் ஒரு காரணமாக காட்டியது தவறு என்று கூறியுள்ளார். மாவட்ட ஆட்சித் தலைவர் தனது 7.12.08 நாளிட்ட கடிதத்தில், சீராய்வு மனுதாரருக்கு எதிராக துணைத் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் 10.10.2007 மற்றும் 18.10.07–ல் கொடுத்த புகார் மனுவினை ஊராட்சி மன்றத் தலைவருக்கு அனுப்பி விளக்கம் கோரப்பட்டதாகவும், ஊராட்சி மன்றத் தலைவரால் விளக்கம் அளிக்கப்படவில்லை எனவும், இப்புகார் மனுவினை அவருக்கு கொடுக்காமல், விளக்கம் கோராமல் தன்னிச்சையாக பதவி நீக்கம் செய்தது தவறு என்று சீராய்வு மனுதாரர் கூறியது ஆதாரம் அற்றது என்பதால் இப்பத்தியினை தள்ளுபடி செய்யலாம் என தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக ஆவணங்களை ஆய்வு செய்ததில் வட்டார வளர்ச்சி அலகு/கிளை ஊராட்சி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம் தனது ந.க.எண்.116007/அ6, நாள் 18.10.2207/உ.இ(ஊ) அவர்களுக்கு அனுப்பிய அறிக்கையில் இச்சீராய்வு மனுதாரர் மீது வார்டு உறுப்பினர்கள் தெரிவித்த புகார் தொடர்பாக 15.07.07 அன்று பிற்பகல் 3 மணியளவில், சோத்துப்பெரும்பேடு ஊராட்சி மன்ற அலுவலகத்தில் தன்னால் விசாரணை மேற்கொள்ளப்பட்டதாகவும், அவ்வாணையில் சோத்துப்பெரும்பேடு ஊராட்சி மன்றத் தலைவர் (சீராய்வு மனுதாரர்) மற்றும் புகார் மனுவில் கையொப்பம் இட்ட வார்டு மற்றும் இதர உறுப்பினர்கள் அனைவரும் விசாரணைக்கு வருகை தந்துள்ளனர் எனவும் அவர்கள் முன்னிலையில் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். எனவே சீராய்வு மனுதாரர் தனது சீராய்வு மனு தனக்கு எதிராக துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கொடுத்த புகாரின் மேல் தன்னிடம் விளக்கம் கோராமல் தன்னிச்சையாக பதவி நீக்கம் செய்ய இதையும் ஒரு காரணமாக காட்டியது தவறு என்ற கூற்று உண்மைக்கு புறம்பானது என்பதால் இதனை நிராகரிக்கலாம்.

**<u>மனுதாரரின் வாதம்</u>**

மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி பராமரிப்புக்காக ரூ.12800 செலவிடப்பட்டதில் ரூ.9200/–க்கு துணை பட்டியல்கள் இணைக்கப்படவில்லை தெருவிளக்கு மின் உபகரணங்கள் ரூ.20,050/–க்கு பெறப்பட்டதில் துணைப்பட்டியல்கள், ஆவணங்கள் சரிவர பராமரிக்கப்படவில்லை. மேற்கொள்ளப்பட்ட செலவினத் தொகையை செலுத்தக் கோரியும் ஊராட்சி நிதியில் செலுத்தப்படவில்லை. 2001–2008–ம் நிதியாண்டில் படிவம் 39 நிர்ணயம் செய்து வீட்டுவரி வசூலிக்கப்படவில்லை. மொத்த வரி ரூ.2856/–ல் ஊராட்சியில் செலுத்திய ரூ.1000/– போக நிலுவைத் தொகை ரூ. 1856/– செலுத்தவில்லை; மின்விளக்கு பராமரிப்பு செலவுத் தொகை ரூ.77,800/–க்கு முழுமையான செலவின விபரம் அளிக்கவில்லை, விளக்கமும் பெறப்படவில்லை என்று தெரிவித்து சோத்துபெரும்பேடு ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து பதவி நீக்கம் செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

குற்றச்சாட்டுகளுக்கான விளக்கம் காலதாமதமின்றி 14.05.2008 அன்று ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சி) திருவள்ளூர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் 21.10.2008 தேதியிட்ட பதவி நீக்க அறிக்கையில் விளக்கம் காலம் கடந்து 18.07.2008 சமர்ப்பிக்கப்பட்டதாகவும் விளக்கம் திருப்திகரமாக இல்லை என அறிந்ததாகவும் பொன்னேரி வட்டாட்சியர் மூலமாக தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் 1994 பிரிவு 205(3) முதல் 205(10) வரை விதிக்கப்பட்டுள்ள கடமையினை நிறைவேற்ற உத்தரவிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் பிரிவு 205(4)–ன்படி 7 நாட்களுக்கு முன் கூட்டத்திற்கான அறிவிப்பினை சார்பு செய்யாமல் சார்பு செய்து என்னிடம் கையெழுத்து பெற்றதாக பொன்னேரி வட்டாட்சியரும், சோழவரம் வட்டார அலுவலரும் பொய்யாக என் போன்றே கையெழுத்து போட்டு எனக்கு சார்பு செய்ததாக போலியான ஆவணம் தயாரித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் நான் போட்ட வழக்கு W.P.No.25850/08–ல் கோப்பினை தாக்கல் செய்துள்ளார்கள். இது குறித்து பொன்னேரி வட்டாட்சியர் மீதும், சோழவரம் வட்டார வளர்ச்சி அலுவலர் மீதும் நடவடிக்கை எடுக்க கோரி தமிழக அரசு தலைமை செயலாளர் அவர்களுக்கும், பஞ்சாயத்து ஆய்வாளர் / மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் அவர்களுக்கும் 08.12.2008 அன்று புகார் அனுப்பியுள்ளேன்.

**<u>மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கை</u>**

சோத்துப்பெரும்பேடு ஊராட்சி மன்றத் தலைவருக்கு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205ன் நோட்டீஸ் (முதுநிலை மாவட்ட ஆட்சியர் அவரது கடிதம் ந.க.எண். 6427/2007/அ3/உ.அ(ஊ) நாள் 3.5.2008) ஊராட்சி மன்றத் தலைவருக்கு 7.5.2008 அன்று சார்வு செய்யப்பட்டது. சார்வு செய்யப்பட்ட நாளிலிருந்து 15 தினங்களுக்குள் ஊராட்சி மன்றத் தலைவர் பதில் அளிக்கப்படவேண்டும். ஆனால் ஊராட்சி மன்றத் தலைவரது பதில் 18.7.2008 அன்றுதான் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகம் வரப்பெற்றது. மேல் முறையீட்டில் ஊராட்சி மன்றத் தலைவர் குறிப்பிட்டுள்ளது போல் 14.5.2008 அன்று பதில் ஏதும் வரப்பெறவில்லை. மேற்படி பதில் நேரில் அளித்ததற்கான ஆதாரமோ பதிவஞ்சலில் அனுப்பியதற்கான ஆதாரமோ ஏதும் அவரால் காண்பிக்கவில்லை. எனவே உரிய காலக் கெடுவுக்குள் விளக்கம் அளிக்கப்பட்டதாக ஊராட்சி மன்றத் தலைவர் தெரிவித்துள்ள கூற்று ஆதாரமற்றது மற்றும் பொய்யானது. ஊராட்சி மன்றத் தலைவரால் 18.7.2008 அன்று பெறப்பட்ட பதிலில் தெரிவிக்கப்பட்ட விளக்கம் திருப்திகரமாக இல்லை என கருதி தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205(2)–ன்படி வட்டாட்சியர் பொன்னேரி அவர்களுக்கு மேல் நடவடிக்கை எடுத்து அதன் விவரத்தினை 30 தினங்களுக்குள் அளிக்க முதுநிலை மாவட்ட ஆட்சித் தலைவர் ந.க.எண். 6427/07/அ3/உ.இ.(ஊ) நாள் 8.8.2008ன்படி தெரிவிக்கப்பட்டது. வட்டாட்சியர் பொன்னேரி தனது கடிதம் ந.க.எண். 15309/08/அ4, நாள் 18.8.2008ன்படி 28.8.2008 அன்று ஊராட்சியில் கூட்டம் நடத்த உள்ளதற்கான கடிதத்தினை சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலவலர் மூலமாக ஊராட்சி மன்றத் தலைவருக்கும் இதர அனைத்து வார்டு உறுப்பினர்களுக்கும் சார்வு செய்துள்ளார். இதில் ஊராட்சி மன்றத் தலைவரும் கையொப்பம் இட்டுள்ளார். இக்கையொப்பத்தினை இதர ஆவணங்களிலுள்ள கையொப்பத்துடன் ஒப்பிடுகையில் இணக்கமாக உள்ளது. வட்டாட்சியர் கடிதத்தின்படி கூட்டம் நடைபெறும் நாளுக்கும் கடிதம் சார்வு செய்த நாளுக்கும் 10 தினங்கள் கால அவகாசம் தரப்பட்டுள்ளது. வட்டாட்சியர் கடிதம் ந.க.எண். 15309/08/அ4 நாள் 28.8.2008 அன்று கூட்டம் நடத்தி அதன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே ஊராட்சி மன்றத் தலைவர் மேல் முறையீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது போல கூட்ட நடவடிக்கைக்கான

சார்வு கடிதத்தில் தன் கையொப்பம் பொய்யாக இடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள கூற்று பொய்யானது. மேலும் ஆதாரமற்றது. ஊராட்சி மன்றத் தலைவர் தனது பதவி நீக்கத்தினை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடுத்த வழக்கிற்கு (W.P.No.25850/08) சென்னை உயர்நீதி மன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கவில்லை. மேற்படி வழக்கின் மீது பொன்னேரி வட்டாட்சியரது கோப்பினை ஆய்வு செய்யும்போது கூட்ட நடவடிக்கை தொடர்பான அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்யப்பட்டது. இதில் எந்தவித விதி மீறல்களும் உள்நோக்கத்துடன் செயல்படுவதற்கான காரணங்களும் இல்லை.

**<u>அரசின் கருத்து:</u>**

குற்றச்சாட்டு 2–ற்கு சீராய்வு மனு தாக்கல் செய்த மனுதாரர் தனது சீராய்வு மனுவில் தனக்கு எதிராக கொடுக்கப்பட்ட 1 முதல் 6 வரையிலான குற்றச்சாட்டுக்களுக்கான விளக்கத்தினை மாவட்ட ஆட்சியரது 3.5.08 நாளிட்ட ந.க.எண்.6427/07/அ3 விளக்கம் கோரும் நோட்டீசை பெற்றுக் கொண்டுதான் தாமதம் இன்றி 17.5.08ல் ஊரக வளர்ச்சி உதவி இயக்குர் (ஊராட்சிகள்), திருவள்ளூர் அவர்களிடம் சமர்ப்பித்தற்கு எந்த ஆதாரமும் இல்லை. ஆனால் மனுதாரர் திரு.எம்.வாசுதேவன், 18.7.08 அன்று கையெழுத்திட்ட விளக்கம் இக்கோப்பில் உள்ளது. மேலும் இவ்விளக்கம் திருப்தி இல்லாமல் பொன்னேரி வட்டாட்சியர் மூலமாக தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம், 1994, பிரிவு 205 (3) முதல் 205(10) வரை விதிக்கப்பட்டுள்ள கடமையினை நிறைவேற்ற மாவட்டாட்சியர் உத்திரவிட்டதன் பேரில் சட்டப்பிரிவு 205 (4)ன்படி வட்டாட்சியரால் வழங்கப்பட்ட நோட்டீஸை சீராய்வு மனுதாரருக்கு சார்வு செய்யாமல் வட்டாட்சியர் இவர் போன்று கையெழுத்திட்டு உள்ளார் என்று தெரிவித்தற்கு சென்னை உயர்நீதிமன்றம் W.P.25850/08 Misc.Petition No.1, 2, 3/08ல் 14.11.08ல் வழங்கிய தீர்ப்பில் சீராய்வு மனுதாரர் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த உறுதியாவணத்தில் உள்ள கையெழுத்தும், வட்டாட்சியர் நோட்டீஸில் உள்ள கையெழுத்தும் ஒன்றாக உள்ளதாக தெரிவித்ததுடன், அலுவலர்கள் நோட்டீஸ் சார்வு செய்ததாக தெரிவித்ததை சந்தேகிக்க எவ்வித முகாந்திரமும் இல்லை என தெரிவித்துள்ளது. மேலே கண்ட சூழ்நிலையில் இக்குற்றச்சாட்டிற்கு எதிராக தாக்கல் செய்த காரணங்களை நிராகரிக்கலாம்.

6. அரசு, சீராய்வு மனுதாரரின் கூற்று அதன் மீதான மாவட்ட ஆட்சித் தலைவர் கருத்து, மற்றும் சார்புடைய ஆவணங்கள் அடிப்படையில் கவனமாகவும் தன்னிச்சையாக பரிசீலினை செய்தது. சீராய்வு மனுதாரர் தனது சீராய்வு மனுவில் குறிப்பிட்டவை ஏற்றுக்கொள்ளக் கூடியவையாக இல்லை என்பதால் அவரது சீராய்வு மனுவினை நிராகரிக்கலாம் என முடிவு செய்து அரசு அவ்வாறே நிராகரித்து ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி,**
அரசு முதன்மைச் செயலாளர்